சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண். 63/2023

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ம் நாள். வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. சபரீசன், கிரேடு-2 பென்ச் கிளார்க், மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாக்கியலட்சுமி | வயது | 49 |
| க/பெ. | யுவராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டூர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | | |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 6 ம் வகுப்பு வரை படித்து உள்ளேன். நான் என்ன வேலைக்கு போகிறேன் என்றால் வேலை எதுவும் போகவில்லை. வீட்டில் தான் இருக்கிறேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவரின் பாகத்தினை கேட்டு தாக்கல் செய்து உள்ளேன். பிராதில் எத்தனை சொத்துக்கள் காட்டி உள்ளேன் என்றால் 2 சொத்துக்கள் காட்டி உள்ளேன். பிராது 1வது இன சொத்தை பார்த்துள்ளேன் என்றால் பார்த்து உள்ளேன். பிராது 2 இன சொத்தில் தான் குடியிருக்கிறேன். பிராது 1வது இன சொத்து காலி இடமா என்றால் தார்சு கட்டடம் உள்ளது. அங்கு லாரிகளுக்கு பாடி கட்டும் ஒர்க்ஸ் ஷாப் உள்ளது. 2 ம் வாதி எனது மகள் என்றால் சரி தான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/. கா. கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.